
# நானும் என் எழுத்தும்

(தொகுதி-6)




தொகுப்பாசிரியர்

தீபம் எஸ். திருமலை

காம்கேர் கே. புவனேஸ்வரி,
F-4. பத்மாவதி காம்ப்ளெக்ஸ்,
54, வெள்ளாளர் தெரு,
ஆதம்பாக்கம்,
சென்னை - 600088
போன்: 94449 49921,
98842 80265.

**நானும், என் குடும்பமும்:**

நான் ஏன் எழுதுகிறேன்? யோசித்துப் பார்க்கும்போது என் சிறு வயது ஞாபகங்கள் எட்டிப் பார்க்கின்றன... என்னுடன் கூடப் பிறந்தவர்கள் 2 பேர். ஒரு தம்பி. ஒரு தங்கை. என் எழுத்துக்கு மிக முக்கியக் காரணம் என் அப்பாவும் அம்மாவும் என்று சொல்லலாம். ஆம். என் அப்பாவும் அம்மாவும் மாதா, பிதா என்ற ஸ்தானத்திற்கும் அப்பாற்பட்ட நல்ல தோழமையோடு பழகியதால், எனக்கு வேறு நண்பர்கள் தேவையே இல்லை என்று நினைக்கும் அளவுக்கு, எனது எல்லா உணர்வுகளையும், நண்பர்களிடம் பகிர்ந்துகொள்ளக்கூடிய அனைத்து விஷயங்களையும் ஒளிவு மறைவு இல்லாமல் என் பெற்றோரிடம் என்னால் பகிர்ந்துகொள்ள முடிந்தது. இன்றும் முடிகிறது. இதுதான் என் எழுத்துக்கு முதல் அச்சாணி.

**வடிகால்:**

எனது சந்தோஷம், வருத்தம், ஆத்திரம், கோபம்... இப்படி எல்லாவிதமான உணர்வுகளையும் என் பெற்றோரிடம் மட்டுமே வெளிப்படுத்தி வந்தேன். ஒரு காலகட்டத்தில் வெளி உலகத்தில் என்னைப் பாதிக்கும் விஷயங்களை, காகிதத்தில் எழுத ஆரம்பித்தேன். அது எனக்கு நல்ல வடிகாலாக இருந்தது.

**சாதனைத் தீ:**

பள்ளிப் பாடப் புத்தகங்களை படிக்கும்போது மற்றுமொரு விஷயம் எனக்கு நல்ல தூண்டுகோலாக இருந்தது.

ஐசக் நியூட்டன், சர்.சி.வி. ராமன், கணித மேதை ராமானுஜம் போன்றவர்களின் கண்டுபிடிப்புகளும், ஆப்ரகாம்லிங்கன், நேரு, இந்திராகாந்தி போன்றவர்களின் சாதனைகளும், அவர்களது புகைப்படங்களும் எனக்குள் இருந்த சாதனை 'தீ'க்கு எரிகின்ற நெருப்பில் எண்ணை ஊற்றுவதைப் போல அமைந்தது.

**தூக்கம் பறிபோனது:**

இவர்களைப் போல நாமும் ஏதேனும் சாதனை செய்ய வேண்டும். நமது பெயரில் கண்டுபிடிப்புகள் உருவாக வேண்டும் என்றெல்லாம் கற்பனை செய்ய ஆரம்பித்தேன். அந்தக் கற்பனை என்னையும் அறியாமல் என் நாடி நரம்புகளில் ஊடுருவி, இரத்தத்தோடு இரத்தமாகக் கலக்க ஆரம்பித்தது. இதன் காரணமாய் 'என்னால் என்ன சாதனை செய்ய முடியும்?' என்று சதா சர்வகாலமும் யோசிக்க ஆரம்பித்தேன். விளைவு இரவுத் தூக்கம் பறிபோனது.

என்னைச் சுற்றி நடக்கும் எல்லா விஷயங்களையும் நன்றாகக் கவனிப்பேன். ஆனால், நான் ரசிக்கும் விஷயங்கள், என்னைப் பாதிக்கும் சம்பவங்கள், எனக்குத் தோன்றும் கருத்துகள் போன்றவைகளை பேப்பரில் எழுதி வைக்கும் பழக்கம் மட்டும் என்னை நன்றாக தொற்றிக் கொண்டது. இதெல்லாம் எனது 10 வயதுக்குள் எனக்குள் ஏற்பட்ட பழக்கம்.

ஒருநாள் என் அப்பா அம்மா அவர்கள் அலுவலக நண்பரின் பெண்ணுடைய பரத நாட்டிய நிகழ்ச்சிக்குச் சென்று வந்தார்கள். வீட்டிற்கு வந்ததும் 'இந்த சின்ன வயதில் என்னமா டான்ஸ் ஆடறா... நல்ல திறமை சாலியான பெண்?' என்று ஏகத்துக்குப் புகழ்ந்தார்கள். அது எனக்குள் இருந்த சாதனைத் தீயை சம்மட்டி கொண்டு தாக்கியது அந்தப் புகழ்ச்சி. என் வயதை ஒத்த அந்த பெண் சாதிக்கும்போது என்னால் ஏன் சாதிக்க முடியாது? கேள்விகள் என்னைக் குத்திக் குதறின.

**எனக்குள் இருந்த திறமை:**

எனக்கு என்ன திறமை இருக்கிறது? நடனமா... ஓவியமா... பேச்சா... பாடலா... என்று ஒவ்வொன்றாக

யோசிக்கும்போது, யோசித்ததை வழக்கம்போல எழுதி வைத்தபோது, எனக்குள் இருக்கும் ஒரு மாபெரும் திறமை எனக்குப் பிடிபட்டது. ஆம்... என்னால் எந்த விஷயத் தைப் பற்றியும் எழுத முடியும் என்ற திறமை எனக்குத் தெரிந்தது. எனக்குள் இருந்த அத்தனை ஜன்னல்களும் திறந்துகொண்டதைப் போல இருந்தது. திடீரென ஒரு வெளிச்சம் தோன்றியது போலவும் தோன்றியது. ஒரு சந்தோஷம். நிம்மதி. அந்த உணர்வு ரொம்ப அழகானது. அர்த்தபூர்வமானது.

**அம்மாவின் புத்தகம் படிக்கும் பழக்கம்:**

அடுத்து, என் எழுத்துக்களைச் செம்மைப்படுத்தியது புத்தகம் படிக்கும் பழக்கம். சாதாரணமாக தோன்றியதை எல்லாம் பேப்பரில் எழுதி வைக்கும் பழக்கம் உள்ள எனக்கு, புத்தகம் படிக்கும் ஆர்வத்தை ஏற்படுத்தியது என் அம்மாதான். ஆம். அம்மா ஏகத்துக்குப் படிப்பார். படித்ததோடு படித்ததில் பிடித்ததை சேகரித்து வைப் பார்.

**அப்பாவின் உதவி:**

விடுமுறை தினங்களில் அம்மா சேகரித்து வைத்ததை நாங்களே பைண்டு செய்ய, அப்பா நூல் கண்டு, ஊசி, பசை, கலர் அட்டை போன்றவைகளை வாங்கி வருவார். எங்கள் கைகளால் நாங்களே பைண்டு செய்து தயாரான கலர் கலரான புத்தகங்களைப் பார்க்கும்போது அதைப் படிக்க வேண்டும் என்கிற ஆர்வம் எங்களையும் அறியாமல் துளிர்விடும். இப்படி ஆரம்பித்ததுதான் என் படிக்கும் ஆர்வம்.

எங்கள் சிறு வயது கோடை விடுமுறை தினங்களில் எங்கள் பொழுதுபோக்கு இதுதான். நிறைய படிக்க ஆரம்பித்ததன் விளைவு விஷயங்களை நிறைய தெரிந்து கொள்ள முடிந்தது. எங்களுக்குள் இருந்த கற்பனை சக்தி வளர்ந்தது. எங்களுக்குள் இருந்த திறமையைக் கண்டு கொள்ள முடிந்தது.

ஆம். எனக்குள் இருந்த கற்பனை எழுத்தாளர் வளர ஆரம்பித்தார். என் தங்கைக்குள் இருந்த ஓவியர் ஜமாய்க்கத் தொடங்கினார். என் தம்பிக்குள் இருந்த

கார்டூனிஸ்ட் குட்டிக் கரணம் போட்டு உற்சாகமாகத் தொடங்கினார். இன்றும் என் வீட்டில் நாங்கள் தைத்த புத்தகங்கள், கல்கியின் பொன்னியின் செல்வனுமாகவும், சுஜாதாவின் சில்லின் புரட்சியுமாகவும் கம்பீரமாய் இருக்கின்றன.

**பத்திரிகை அலுவலகங்களில் என் படைப்புகள்:**

நான் எழுதியதை நானே திரும்ப எடுத்து படித்துப் பார்க்கத் தொடங்கினேன். எனக்கு நானே 'சபாஷ்' போட்டுக் கொண்டேன். இப்படி 'சும்மா' எழுதிக் கொண்டிருந்த நான் எனது 12-ம் வயது முதல் நான் எழுதியதை பத்திரிகைகளுக்கு அனுப்ப ஆரம்பித்தேன். தினமும் கதைகள், கட்டுரைகள், கவிதைகள் என ஏதேனும் எழுதி பத்திரிகைகளுக்கு அனுப்புவேன்.

நான் எழுதியவைகளில் தேர்ந்தெடுக்கப்படாதவைகள், திரும்பி அனுப்ப இணைத்தனுப்பும் கவரில் திரும்பி வரும். அதற்காகவே தினமும் ஆவலாக போஸ்ட்மேனை எதிர்நோக்கிக் காத்திருப்பேன். சும்மா சொல்லக் கூடாது. ஆரம்பகாலத்தில் நான் அனுப்புவது அத்தனையுமே திரும்பி வரும். ஆனாலும், அதுவும் ஒரு சுகமான சந்தோஷமாகவே இருந்தது.

நான் அனுப்புவதை பத்திரிகை அலுவலகங்களில் படித்துப் பார்த்துத்தானே திருப்பி அனுப்புகிறார்கள். அவர்கள் படித்துப் பார்ப்பதே எனக்கு பேரானந்தமாக இருந்தது. போஸ்ட்மேனை பார்க்காத நாட்கள் எனக்கு துக்ககரமாக இருந்தது.

**ஊர், ஊராகச் சுற்றிய அனுபவம்:**

என் அப்பா, அம்மா இருவரும் தொலைபேசித் துறையில் 40 ஆண்டுகாலம் உயர்பதவியில் பணி செய்து ஓய்வு பெற்றவர்கள். அவர்களும் படிப்படியாக உழைப் பால் உயர்ந்தவர்களே. அவர்கள் பணிக்காலத்தில் தமிழகமெங்கும் கிட்டத்தட்ட 30 வெவ்வேறு ஊர்களில் வசிக்கும் உன்னத வாய்ப்பு எங்களுக்குக் கிடைத்தது. இந்த இடமாற்றம் எங்கள் கற்பனை சக்திக்கு தூண்டுகோலாக அமைந்தது. புதுப்புது மனிதர்கள், வெவ்வேறு பழக்க வழக்கங்கள், புத்துணர்வு தரும் வித்தியாசமான இயற்கைச்

சூழல்... இப்படி மாற்றம் தரும் சூழல் எல்லாமே, எங்கள் கற்பனை சக்தியைத் தூண்டிவிட நாங்கள் எங்கள் துறையில் பிரகாசிக்க ஆரம்பித்தோம்.

**என் முதல் குழந்தை:**

ஒருநாள்... அன்று என் வயது 12. அந்த நாள் என் வாழ்நாளில் நான் அதிகபட்ச சந்தோஷமாக இருந்த நாள் என்று சொல்லலாம். ஆம். என் முதல் கதை 'கோகுலம்' என்ற சிறுவர்களுக்கான பத்திரிக்கையில் 'செய்யும் தொழிலே தெய்வம்' என்ற பெயரில் வெளிவந்த நாள் தான் அது. அன்று, நான் உணர்ந்த மனமகிழ்ச்சியை, வார்த்தைகளால் விவரிக்க இயலவில்லை. வானத்தையே தொட்டுவிட்டு வந்ததைப் போல சந்தோஷத்தில் குதிக்க ஆரம்பித்தேன்.

**கற்பனையில் ராணி:**

அன்று முதல் என் கற்பனையில் நான் ராணி ஆனேன். சதா சர்வகாலமும் எழுத்து...எழுத்து... எழுத்து பெரிய்ய்ய்ய்ய்ய்ய்ய்ய எழுத்தாளர் ஆக வேண் டும் என்ற இலட்சியத்தை வளர்த்துக் கொண்டே வந்தேன். யாகம் செய்வதைப்போல இலட்சியத் தீ என்னுள் வளர்ந்துகொண்டே வந்தது. அவ்வப்போது கற்பனை வேறு. நான் பெரிய எழுத்தாளராக உருவாகி விட்டதைப் போலவும், பெரிய பங்களாவில் மாடியில் நான் உட்கார்ந்து எழுதிக் கொண்டிருப்பதைப் போலவும், என்னைச் சந்திக்க பலர் என் பங்களா வாசலில் காத்துக் கிடப்பதைப் போலவும், என் உதவியாளர் ஒவ்வொரு வராக அவர்களை உள்ளே அனுப்புவதைப் போலவும் அழகான கவிதைபோல இருக்கும் அந்தக் கற்பனை. இப்பொழுது நினைத்தால் அந்தக் கற்பனை மிகவும் குழந்தைத்தனமாக இருக்கிறது.

**கனவு, கற்பனை, லட்சியம், உழைப்பு:**

கனவு, கற்பனையோடு நான் நின்றுவிடவில்லை. தினமும் இரவு 2 மணிக்கு எழுந்து விடுவேன். 5 மணி வரை எழுதிக் கொண்டிருப்பேன். 5–6 குட்டித் தூக்கம். திரும்பவும் 6 மணிக்கு எழுந்து படிப்பு, பள்ளி, கல்லூரி... இப்படியாக எனது இரவு நேரத் தூக்கம் 4

மணி நேரமானது. எழுத்தாளராக வேண்டும் என்ற என் கனவு பலிக்க நான் எடுத்துக்கொண்ட இந்த முயற்சி வீணாகவில்லை. கொஞ்சம் கொஞ்சமாக எனது படைப்பு கள் பத்திரிகைகளில் வெளிவர ஆரம்பித்தன. 1992-ல் நான் கம்ப்யூட்டர் சயின்ஸில் முதுகலைப் பட்டம் பெறு வதற்குள் 50-க்கும் மேற்பட்ட எனது படைப்புகள் கல்கி, ஆனந்தவிகடன், சாவி, கலைமகள், தினமலர் - வாரமலர் என்று பல முன்னணிப் பத்திரிகைகளில் பிரசுரம் ஆனதோடு, பரிசுகளையும் பெற்றது என்று சொல்லலாம். ஆம். கனவும், கற்பனையும் என்னைக் கைவிடவில்லை.

என் கனவு, கற்பனை, இலட்சியம் இவைகள் என் இரத்தத்தோடு கலந்ததினாலோ என்னவோ, அவைகள் என் தூக்கத்தை விரட்டி அடித்துவிட்டது. இன்றும் என் உடல்நிலையும், மனநிலையும் எப்படி இருந்தாலும் இரவு 2 மணிக்கு மேல் உறக்கம் கிடையாது.

**என் சொந்த நிறுவனம்:**

படித்து பட்டம் பெற்ற பின்பு, நான் காம்கேர் சாஃப்ட்வேர் பிரைவேட் லிமிடட் என்ற பெயரில் சாஃப்ட்வேர் தயாரிப்பு நிறுவனம் ஒன்றை ஆரம்பித்தேன். இன்றோடு 18 வருடம் ஆகிறது. எனது பெயரில் கண்டுபிடிப்புகள் உருவாக வேண்டும் என்கிற என் கனவு பலித்தது. 'காம்கேர்' என்ற பிராண்ட்டில் சாஃப்ட்வேர்கள், வெப்சைட்டுகள், மல்டிமீடியா அனிமேஷன் தயாரிப்புகள், குறும்படங்கள் என வெளியிட்டு வருகிறேன். ஏராளமானோருக்கு வேலை வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்து வருகிறேன்.

**என் எழுத்தும், புத்தகங்களும்:**

முக்கியமாகச் சொல்ல வேண்டும் என்றால், புத்தகங்கள் மற்றும் பத்திரிகைப் படைப்புகள் போன்றவைகள் 'காம்கேர் புவனேஸ்வரி' என்ற பெயரில் எழுதி வருகிறேன். இதுவரை 1000-க்கும் மேற்பட்ட கம்ப் யூட்டர் சம்பந்தப்பட்ட கட்டுரைகள் பல முன்னணிப் பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன. 50-க்கும் மேற்பட்ட கம்ப்யூட்டர் புத்தகங்களை தமிழில் எழுதி, பல முன்னணி

பதிப்பகங்கள் வாயிலாக வெளியிட்டுள்ளேன். எனது பதிப்பகம் மூலம் நான் வெளியிட்ட புத்தகங்கள், பல பல்கலைக்கழகங்களில் பாடத் திட்டமாக உள்ளன. இந்த வருடம் (2010) எளிமையான ஆங்கிலத்தில் கம்ப்யூட்டர் புத்தகங்களை வெளியிடும் பிராஜெக்ட்டில் ஈடுபட்டுள்ளேன்.

### கம்ப்யூட்டர், தமிழ், இலக்கியம், ஆன்மீகம்...

கம்ப்யூட்டர் மட்டுமல்லாது தமிழ், இலக்கியம், ஆன்மீகம், சமுதாயம், பயணம் இப்படி எந்த சப்ஜெக்ட்டைப் பற்றியும் கதை, கட்டுரை, கவிதை எழுதப் பிடிக்கும். என் நிறுவன ஆடியோ, வீடியோ, மல்டிமீடியா மற்றும் குறும்படங்களுக்கு ஸ்கிரிப்ட் எழுதும் பணி என்னுடையதுதான். உதாரணத்துக்கு, கந்தர்சஷ்டிக் கவசத்தை மல்டிமீடியா அனிமேஷன் சிடியாகத் தயாரித்தபோது, அதில் கந்தர்சஷ்டிக் கவசப் பாடலுக்கான உரையை நான் எழுதி உள்ளேன்.

### என் பெயர்தான் முதல் விளம்பரம்:

இப்படியாக, நான் 'காம்கேர் புவனேஸ்வரி' ஆனேன். என் நிறுவன தயாரிப்புகளுக்கு முதல் விளம்பரம் என் பெயரும், என் எழுத்தும்தான் என்று சொன்னால் நம்ப மாட்டீர்கள்.

### கனவு பலித்துவிட்டது:

குழந்தைத்தனமாக அன்று நான் கண்ட கனவு பலித்து வருகிறது. இன்று, நான் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் இமெயில் மூலமாகவும், கடிதம் மூலமாகவும், நேரடியாகவும் தினமும் பலர் என்னைச் சந்திக்க அவர்கள் படிப்புக்காகவும், வேலைக்காகவும், கம்ப்யூட்டர் சம்பந்தப்பட்ட ஆலோசனைகளுக்காகவும் என் அனுமதி கேட்டு தொடர்ந்து வருகின்றனர்.

அன்றும் இரவு 2 மணிக்கு எழுந்து எழுதிக் கொண்டிருந்தேன். இன்றும், என் இரத்தத்தோடு கலந்து விட்ட அந்த வழக்கத்தில், 2 மணிக்கே எழுந்து என் வேலைகளைத் தொடங்கி விடுகிறேன். எழுத்தின் அடுத்த கட்ட வளர்ச்சியாக, ஆடியோ, வீடியோ, அனிமேஷன்

மற்றும் சாஃப்ட்வேர் மூலம் என் எழுத்தை பல வடிவங்களில் பல்வேறு தயாரிப்புகளாக வெளியிட்டு வருகிறேன்.

இன்று... என் நிறுவன ஆடியோ, வீடியோ, அனிமேஷன் மற்றும் சாஃப்ட்வேர் தயாரிப்புகள் அனைத்தும் 'காம்கேர்' தயாரிப்புகள். அவைகளின் எண்ணம் – எழுத்தும் – ஆக்கம் – இயக்கம் – தயாரிப்பு – 'காம்கேர் புவனேஸ்வரி'.

**மனமார்ந்த நன்றி!**

என்னை என் போக்கில் வாழவிட்ட என் பெற்றோருக்கும், ஓவியம் பெரிதா? கார்ட்டூன்கள் பெரிதா? எழுத்து பெரிதா? என என் எழுத்துக்களோடு ஆரோக்கியப் பட்டிமன்றம் போட்ட என் தம்பி, தங்கைக்கும், என் கனவுக்கும் அங்கீகாரம் கொடுத்த என் எழுத்துத் திறமைக்கும், எனது படைப்புகளுக்கு தொடர்ந்து ஆதரவளித்து வரும் நம் இந்திய தமிழ்நாட்டு மக்களுக்கும், என் ஒட்டு மொத்த திறமைகளுக்கும் வடிகாலாக இருக்கும் என் நிறுவனத்துக்கும், என் தயாரிப்புகளில் என்னுடன் இணைந்து வேலை செய்யும் அனைவருக்கும் இந்த கட்டுரை மூலம், என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எது எப்படியோ, எழுத்தாளராக வேண்டும் என்ற என் கனவுதான் நான் ஒரு நிறுவனத்தைத் தொடங்கி, வெற்றிகரமாக நடத்திவரக் காரணமானது என்று சொன்னால் அது மிகையாகாது. கனவு, இலக்கு, உண்மையான உழைப்பு, மனித நேயம் இவை நான்கும் என் வெற்றிக் கட்டிடத்திற்கு நான்கு தூண்கள்.